**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் - 2017**

---

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் 16

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 227,566,848 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தி சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 5,630,297 தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 915,178 தொகையான வெட்டும் வாள்களின் பெறுமதி மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைமுறை வேலையான மூலதன வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கல்தெமுல்ல அட்டிமடுவில் பொருத்தப்பட்டிருந்த இரும்பு அலுமாரிகளை மீண்டும் சரி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 834,124 தொகையான செலவினம் இலாப நட்டக்கூற்றில் சீராக்குவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலக்தில் நானாவித கடன்கொடுத்தோராக ரூபா 75,458,361 தொகையான மீதியொன்று மீளாய்வாண்டின் போது முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போதோ அல்லது மீளாய்வாண்டின் போதோ கடன்கொடுத்தோராக உள்ளடக்கப்படாத செலவினங்களுக்காகவும் நானாவித கடன்கொடுத்தோர் கணக்குகள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பிரதான அலுவலகத்தின் கடன்கொடுத்தோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்ட சில கடன்கொடுத்தோர் மீதிகளுக்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அந்த மீதியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 130,272,172 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் மீதியின் சரியான தன்மை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர்வரி மீதி என்பன நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 50,386,639 ஆக இருந்ததுடன் உரிய வரி அறிக்கையின் பிரகாரம் ரூபா 52,558,485 ஆனமையால் ரூபா 2,171,846 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் போன்ற 04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும், பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 1,450,440 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்வுச் சான்றுகளின்மை

பலவருட காலமாக தளம்பல்களுடன் முன்கொண்டுவரப்படுகின்ற வனபாதுகாப்புத் திணைக்களத்திற்கு மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கமாக ரூபா 39,531,327 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்தின் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டு முதல் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,873,954 தொகை மற்றும் அரச மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களுக்கு மேறப்பட்ட ரூபா 11,003,176 தொகையான மீதி காணப்படுவதுடன் அதனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் வனபாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கட்டிட வாடகை ரூபா 19,980,000 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகங்களின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,226,970 தொகையான சம்பளம் மற்றும் படிகள் 2018 யூன் வரையிலும் செலுத்தி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 04 வருடங்களை விஞ்சிய கூட்டுத்தாபனத்தின் வேலைத்தளத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 11,491,279 தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி 2018 மே வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 133,800 வைப்புக்கள், 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தை விஞ்சிய பாதுகாப்பு வைப்பு ரூபா 840,000 தொகை மற்றும் வருடமொன்றிற்கு மேற்பட்ட பழைய கென்க் நேல் வைப்பு ரூபா 1,258,635 தொகை என்பவற்றை தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் உபபிரிவு | கல்தெமுல்ல இயந்திர பொறியியலாளர் பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்த நிர்வாக உத்தியோகத்தரினால் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது அரசியல் செயற்பாடுகளில் முழுமையான காலம் ஈடுபட்டிருந்த போதிலும் தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சம்பள அதிகரிப்புக்களும் வழங்கப்பட்டு ரூபா 1,260,364 தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2007 இன் ஆலோசனைச் சேவையினைத் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவை | வழிகாட்டியின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 257,263,277 தொகையான 17 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,230,774 தொகை ஆலோசனைச் சேவை நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 565,741,554 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதிவிளைவுகள் ரூபா 86,678,961 மிகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 479,062,593 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. விற்பனை வருமானம் ரூபா 39,818,582 இனால் அதிகரித்தமை, விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் ரூபா 84,406,064 இனாலும், நிர்வாகச் செலவினம் ரூபா 122,145,217 இனாலும் மற்றும் திறைசேரிக்குச் செலுத்திய வரியின் அளவு ரூபா 75,000,000 இனால் குறைவடைந்தமை என்பன நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த நிதி விளைவுகள் 2016 ஆம் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்து மீண்டும் மீளாய்வாண்டின் போது அதிகரிப்பைப் பெற்றிருந்தது. எனினும், நிதிவிளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், பெறுமானதத்தேய்வு மற்றும் ஆண்டின் வரிச் சீராக்கல்களின் பின்னர் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டை விட ஒப்பீட்டு ரீதியில் 5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப விகிதம் 49 சதவீதமான உயர் பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும், உற்பத்திச் செலவினத்திற்கு மேலதிகமாக வருமான வரி, நிர்வாகச் செலவினம், விற்பனைச் செலவினம் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவினம் மற்றும் சம்பளங்கள் மற்றும் படிகள் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொடர்ச்சியான உயர்வடைந்து சென்றமையால் தேறிய இலாப விகிதத்தை மொத்த இலாப விகிதத்துடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்து செல்வதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் நடைமுறை விகிதத்தை விட விரைவு விகிதம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் இருப்பில் பணம் கணிசமான வகையில் முடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கிடையே விவசாய கைத்தொழில் உற்பத்திகள், பிரம்பு இறக்குமதி மற்றும் மரங்களுடன் அண்மித்த பூர்த்தி மற்றும் அரை பூர்த்தி பொருட்களை ஏற்றுமதி செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மர உபபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை என்பன இடம்பெற்றிருக்கவில்லை. சிலிப்பர் மரங்களை ஏற்றுமதி செய்தல், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 70 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் 2016 - 2020 காலப்பகுதிக்குரியதாகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டிய மர அறுவடை செய்யும் ஒப்பந்த முகாமைத்துவ முறைமை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்துதல், மர அழிவுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்தல், சரியான திட்டமுறைமையின் மூலம் மரங்கள் தொடர்பாக புள்ளவிபரங்களைப் பெற்றுக்கொள்ளல் என்பவைகளுக்காக வழிமுறைகளைத் ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரித்தல், மரத்துண்டங்களை பதிவேடுகளுக்குக் கொண்டு வருபவர்களின் (Logging Contractors) செயற்திட்ட இயலுமை மற்றும் திறன் அபிவிருத்திக்காக ரூபா 02 மில்லியன் வீதம் வருடாந்தம் ஒதுக்குதல் மற்றும் அவற்றுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் அறுவடை செய்யப்படுகின்ற மரங்களின் செயற்பாடுகளுக்காக நவீன இயந்திர உபகரங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன் வீதம் ஒதுக்கியமை என்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இதுவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ஒட்டுமொத்த விற்பனை வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 1 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், தனியார் மரக் குற்றிகளின் விற்பனை வருமானம், தனியார் மற்றும் அரசாங்க காணிகளில் சிலிப்பர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சிலிப்பர் வருமானம் மின்சார வேலி தூண்கள் மற்றும் யானை வேலி தூண்கள் போன்றவற்றின் விற்பனை வருமானங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 30 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் வீழ்ச்சியடைந்திருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட மரவிற்பனை வருமானம் மாத்திரம் 0.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த தேறிய இலாபம் ரூபா 966,804,360 ஆக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் 12 பிரதேச அலுவலகங்களில் அம்பாறை மற்றும் பொலன்னறுவை என்ற 02 பிரதேசங்களில் ரூபா 16,990,112 கூட்டுத்தொகையான நட்டமும், கூட்டுத்தாபனத்தின் 03 மரத்தொகுதியில் (Complex) இரண்டினது மொத்த நட்டம் ரூபா 52,044,023 கூட்டுத்தொகையும், 03 உற்பத்திச் சாலைகளில் 02 உற்பத்திச் சாலைகளில் ரூபா 52,308,236 கூட்டுமொத்தமான நட்டமும் மற்றும் கல்தெமுல்ல கைத்தொழில் பிரிவில் ரூபா 30,750,890 தொகையான நட்டமுமாக ரூபா 152,093,261 கூட்டு தொகையான நட்டம் பெறப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தின் பிரகாரம், வருமானம் உழைக்கும் வழிகளுக்கிடையே மரத்தளபாடங்களின் விற்பனை வருமானம் பிரதான இடத்தைப் பெற்றிருந்த போதிலும், மீளாய்வாண்டின் மரத்தளபாடங்களின் விற்பனை வருமானம் ஒட்டுமொத்த விற்பனை வருமானத்தில் 9 சதவீதமான போதுமான அளவில் இல்லாது கீழ் மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டில் மரத்தளபாடப் பொருட்கள் பிரிவின் மொத்த இலாபம் ரூபா 985,596 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபத்தில் 0.1 சதவீதமாகும் அதன் பிரகாரம் கூட்டுத்தாபன அரசாங்க மரங்களைப் பெற்றுக் கொள்வதில் தனியுரிமைத் தன்மையைக் கொண்ட நிறுவனமொன்றாக இருந்த போதிலும், தளபாட பொருள் விற்பனை வருமானத்தை உயர்வடையச் செய்வதற்கு தேவையான புதிய சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க மரக் கூட்டுத்தாபகத்தின் 2017 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட விற்பனைகளின் பிரகாரம் இலக்கிடப்பட்ட மரத்தளபாடப் பொருட்களின் விற்பனை வருமானம் ரூபா 501,333,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியாக உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 389,044,488 ஆனமையால் ரூபா 112,288,512 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட வருமானத்தை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

(எ) மரத் தளபாடப் பொருள் உற்பத்தியின் போது, ஏற்படுகின்ற மர அழிவுகளைப் பயன்படுத்தி உப உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்கில் நடாத்திச் செல்லப்பட்ட பூஸ்ஸ பின்கர் ஜொய்ன்ட் உற்பத்திச்சாலை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,240,127 மொத்த இலாபம் பெற்றிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் மொத்த இலாபம ரூபா 2,253,536 ஆக இருந்து ரூபா 986,591 இனால் வீழ்ச்சியடைந்து சென்று மீளாய்வாண்டின் போது ரூபா 2,712,225 மொத்த நட்டத்தைப் பெற்றிருந்தது. அது முன்னைய ஆண்டின் போது பின்கர் ஜொய்ன்ட் உற்பத்தி விற்பனையிலிருந்து கிடைத்த மொத்த இலாபத்துடன் ஒப்பிடும் போது 220 சதவீத வீழ்ச்சியாகும். இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் உப உற்பத்திக்காக போதியளவான சந்தை நிலையொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 07 காட்சிக் கூடங்களில் 04 கூடங்களில் மீளாய்வாண்டில் ரூபா 33,521,024 மொத்த நட்டமொன்று பெறப்பட்டிருந்த போதிலும், தலல்ல, பூஸ்ஸ, அம்பாறை போன்ற 03 காட்சிக் கூடங்களில் பெறப்பட்ட மொத்த நட்டம் ரூபா 4,879,985 கூட்டுத்தொகையாக இருந்ததுடன் மரத்தளபாட பிரிவின் விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் மேலும் இந்த மொத்த இலாபம் / நட்டத்திற்கான விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாகச் செலவினங்களை சீராக்குவதன் மூலம் தேறிய இலாபம் ரூபா 985,596 வரை குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் காட்சிக் கூடங்களிலிருந்து கிடைத்த இலாபத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு போதியளவான பங்களிப்பு கிடைக்கப் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் கெப்படிபொல பிரிவின் மூலம் தனியார் தரப்பினருக்குரிய காணிகளிலிருந்து பெறப்பட்ட மரங்களிலிருந்து மின்சார கம்பங்களைப் பெற்று எஞ்சியிருந்த மரங்கள் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த விலை எண்ணிக்கையை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,051,364 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. பிரதி பொது முகாமையாளரின் (உள்ளகக் கணக்காய்வு) 2016 மார்ச் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அந்த நட்டப் பட்டியலை விநியோகித்த உத்தியோகத்தரிடமிருந்து அல்லது உரிய கொள்வனவாளரிடமிருந்து அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 629,318 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்தெமுல்ல கட்டிடத் தொகுதியில் மர அடுக்கில் புதிதாக இரும்பு இறாக்கைகள் பொருத்தும் ஒப்பந்தம் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமலும் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் ரூபா 2,052,500 தொகைக்கு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பொருத்தப்பட்டிருந்த இறாக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மரங்களை களஞ்சியப்படுத்த முடியாமையின் காரணமாக அந்த இரும்பு இறாக்கைகளை அகற்ற வேண்டியேற்பட்டிருந்தது. இதன்போது ஏற்பட்டிருந்த நட்டத்திற்காக ரூபா 834,124 தொகையை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நிதிப்புலனாய்வினால் வழங்கப்பட்ட குழுத் தீர்மானத்தின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பண்டாரவல பிரதேச அலுவலகத்தையும் கெப்பட்டிபொல களஞ்சியத்தையும் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 566,098 மற்றும் ரூபா 94,906 தொகைகள் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக அந்த செலவினங்கள் பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 4.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏல விற்பனை மூலம் மரக்குற்றிகளை விற்பனை செய்யும் போது நல்ல நிலையிலுள்ள மரக்குற்றிகளை பழுதடைந்த மரக்குற்றிகளுடன் ஒன்றாக சேர்த்து ஏற்றியமையினால் குறைந்த விலை வீதத்தின் அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டமையின் காரணமாக நல்ல நிலையிலுள்ள மரக்குற்றிகளையும் குறைந்த விலையின் கீழ் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) றத்மலான காட்சிக் கூட நிர்மாணத்தை திட்டமிடுவதற்காக 2013 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,477,650 தொகை கல்தெமுல்ல பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் மீண்டும் புதிதாக திட்டமிடப்பட்டு நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2014 நவம்பர் 14 ஆந் திகதி பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா விடுதிகளின் வருமானம் ரூபா 1,046,548 ஆகவும், செலவினம் ரூபா 6,667,018 ஆகவும் இருந்ததுடன் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,620,473 ஆகக் காணப்பட்டது. எனினும், சுற்றுலா விடுதி தொடர்பாக வெளித்தரப்பினருக்கு அறிவித்து வருமானத்தை அதிகரிக்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 25 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 599,178 பெறுமதியான 116 உதிரிப்பாக விடயங்கள் பொறலந்த உதிரிப்பாக களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டமை 2017 செப்தெம்பர் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட பொறலந்த கைத்தொழில் பிரிவின் வாகனம் கழுவும் தளம் சரியான நியமத்தில் தயாரிக்கப்படாமையினால் அதனைப் பயன்படுத்த முடியாதிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 2,094,677 தொகையான கட்டிடம், உபகரணங்கள் மற்றும் நீர்பாய்ச்சும் இயந்திரம் என்பன விளைவற்றுக் காணப்பட்டன.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2308 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 1901 ஆகும். அதன் பிரகாரம் 65 பதவிகளுக்குரிய 440 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும், 07 பதவிகளுக்குரிய 33 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்தப் பற்றாக்குறையில் உயர் முகாமைத்துவத்தில் 06 பதவிகளும், மத்திய முகாமைத்துவத்தில் 45 பதவிகளும், கீழ் மட்ட முகாமைத்துவத்தில் 54 பதவிகளும், முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 69 பதவிகளும் மற்றும் ஆரம்ப சேவையில் 266 பதவிகளும் உள்ளடங்கியிருந்தன.

## 4.6 சந்தைப் பங்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் அரசாங்க மரங்களை பெற்றுக்கொள்ளல், மரத்தளபாட உற்பத்தி, விற்பனை மற்றும் மரவிற்பனை போன்ற சகல பிரிவுகளிலும் அரசாங்கத்தின் தனியுரிமைத் தன்மை காணப்படுகின்ற ஒரே அரச நிறுவனமாக இருந்த போதிலும், சந்தையில் கூட்டுத்தாபனத்திற்குக் காணப்படுகின்ற சந்தைப் பங்கு எவ்வாறானது எனத் தீர்மானிப்பதற்கு காலரீதியில் சந்தை ஆராய்ச்சியொன்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்தின் மரங்களைப் பெற்று உயர்தரத்திலுள்ள தளபாட பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமாக உள்ள அரசாங்கத்தின் தனியுரிமைத் தன்மையைப் பெற்றுள்ள 52 மரக்களஞ்சியங்கள், 06 விற்பனைக் காட்சிக் கூடங்கள் என்பவற்றை உள்ளடக்கிய வளங்களை உரித்தாகக் கொண்டு காணப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் தளபாடப் பொருள் விற்பனைக்காக 0.45 சதவீதமான அதாவது ஒரு சதவீதத்திற்கு குறைந்த சந்தைப் பங்கே உரித்தாகின்றது.

# 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்குரிய அரசாங்க கூட்டுத்தாபனத்தில் தமது விடயப் பரப்பின் கீழுள்ள பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக விளக்கப்பட்டிருந்தது.

(அ) மேற்கூறப்பட்ட 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தும் அடிப்படையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் தமது விடயப் பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்களான வறுமை நிலையான பொருளாதார மட்டத்தை கட்டியெழுப்புதல் மற்றும் புதிய நிலைபேறான நுகர்வு, உற்பத்தி போன்ற நோக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான நுகர்வு, உற்பத்தி மற்றும் பொருளாதார மட்டத்தை கட்டியெழுப்புதல் மற்றும் புதிய உற்பத்திகளை நிர்மாணித்தல் என்பவைகளுக்கான அடிப்படைத்

தரவுகள் இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றங்களை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக அக்கறையைக் காண்பிக்கும் தரப்பினராக பாடசாலை ஆசிரியர்கள், குறைந்த வருமானம் பெறும் தச்சுகைத்தொழிலாளர்கள், மரம் அரியும் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்திற்குரிய இலக்குகளைத் தயாரிக்கும் போது பங்குபற்றலுடன் கூடிய நுழைவொன்றை வெளிப்படுத்தாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) எந்தவொரு செயற்பாட்டிற்கும் சரியான செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று காணப்படுவது அத்தியாவசியமாக இருந்த போதிலும், நிறுவனத்தால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதலை அளவீடு செய்வதற்காக சரியான தரவுகள் அடிப்படையை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்காக நிதிஏற்பாடு போதியளவில் காணப்படாமை, பௌதீக வசதிகள் போதியளவில் இன்மை, பயிற்சி பெற்ற ஊழியர்கள் இன்மை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தால் இனங்காணப்பட்ட பணிகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தயார் நிலையில் இருக்கும் போது ஏனைய நிறுவனங்களுடன் சரியான தொடர்பொன்று பேணப்படாமையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் திட்டம் தயாரிக்கும் போதும் முன் ஆயத்தம் செய்யும் போதும் செயல்நடவடிக்கைகள் மிகவும் மெதுவான அல்லது நலிவான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------------

### 6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயல்முறைகள்

------------------------------------------------------------------------------------

#### 6.1.1 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த மூலதன வடிவிலான 06 விடயங்கள் ரூபா 9,415,858 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நிறுவனங்களினால் ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று (MPP) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 நவம்பர் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட பண்டாரவளை பிரதேச அலுவலகத்தின் நிர்மாணம் 2017 மே 26 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 மே வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஒப்பந்த பெறுமதியில் 18 சதவீதத்தை விஞ்சிய மேலதிக வேலைக்காக ரூபா 4,132,005 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் கேள்விச் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம், நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 238,400,000 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 138,700,000 தொகை பயன்படுத்தப்படவில்லை. அது ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டில் 58 சதவீதமாகும். நல்லாளுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கையுடன் கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதை நிர்ணயிக்கும் வகையில் வருடாந்த திட்டம் மற்றும் பாதீட்டு மீளாய்வுகள் செய்யப்பட வேண்டி இருந்ததுடன் அவ்வாறே நல்லாளுகை வழிகாட்டிக் கோவையின் நியதிகளின் அடிப்படையில் செயற்பட்டுஇருக்குமாயின் அந்த நிதிஏற்பாட்டை வேறொரு பொருளாதார ரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்குமிடையே 85 சதவீதம் முதல் 1252 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்தக்களின் உரித்து உறுதிப்படுத்தாமை மற்றும் சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | அறவிட வேண்டிய கடன் மீதியில் குறித்த கால எல்லையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை, வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய அரசிறையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | தாபன சட்டம், விதி மற்றும் பிரமாணங்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு இடம்பெறாமை. |
| (ஈ) | பெறுகை | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை. |
| (உ) | வருமான நிர்வாகம் | விற்பனை பட்டியலுக்கான வரி கணிப்பீடு செய்தல் சரியாகப் பதியப்படாமை |